# மதுரமான தமிழ்



மதுரமான தமிழ்மொழியில் பாசுரம் பாடிய,

மதுரகவி ஆழ்வாரே நீர் பல்லாண்டு வாழீ !

மதுரமான........

சித்திரை மாதச்சித்திரையில் அவதரித்த நீரும்,

நித்திரையின்றி பல நாட்கள் நடந்தே சென்று

குருகூர் என்னும் திருத்தலத்து மரபொந்தினில்,

குருவைக் கண்டு மகிழ்ந்தவரே பல்லாண்டு வாழீ !

மதுரமான........

ஆச்சர்யமாக, இறைவனைக் காண விரும்புபவர்க்கு,

ஆச்சார்யனே தெய்வமென உணர்த்தி எம்போன்றோர்கு

கண்ணினுன் சிறுதாம்பு என்ற பாசுரத்தைப் பாடி எம்,

கண்களைத்திறந்து வைத்த வள்ளலே பல்லாண்டு வாழீ!

மதுரமான............